(2021) 9 எஸ்.சி.ஆர். 307

மஹாராஷ்ட்ரா மாநில அரசு

-எதிர் -

பங்கஜ் ஜக்ஷி கங்கர்

(குற்றவியல் மேல்முறையீடு எண்.1493/2021)

டிசம்பர் 03, 2021

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர்.ஷா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. சஞ்சிவ் கண்ணா

இந்திய தண்டனைச் சட்டம், 1860 – பிரிவுகள் 384, 386, 387 உ/இ பிரிவு 34. - மகாராஷ்டிரா ஒழுங்கமைவு குற்றங்கள் தடுப்புச் சட்டம், 1999 – பிரிவு 23(1)(அ) மற்றும் 21(4) – குற்ற வழக்கு யாதெனில், ஒரு சர்வதேச கொள்ளைக்கூட்டத் தலைவன் திட்டமிட்ட குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளார் என்றும், அவ்வப்பொழுது எதிர்மேல்முறையீட்டாளர் அந்த ஒழுங்கமைவு குற்ற செயலில் ஈடுபட்டுள்ள கூட்டத்துக்கும், இதர கும்பலுக்கும் நிதி வழங்கி வந்தார் என்றும், அவர்கள் அந்த தொகையை பயன்படுத்தி பிற நபர்களின் உதவியை பெற்று

வந்தனர் என்றும், எதிர்மேல்முறையீட்டாளர் மட்கா வியாபாரம் செய்து வந்ததாகவும் காணப்பட்டது - புலனாய்வுக்கு பிறகு குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் மகாராஷ்டிரா ஒழுங்கமைவு குற்றங்கள் தடுப்புச் சட்டம், 1999 (ம.ஒ.கு.த.ச) ஆகியவற்றின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது – எதிர்மேல்முறையீட்டாளர்/குற்றம்சாட்டப்பட்டவரால் தாக்கல் செய்யப்பட்ட பிணை விண்ணப்பத்தை சிறப்பு நீதிபதி நிராகரித்தார் – உயர் நீதிமன்ற தனி அமர்வும் பிரதிவாதிக்கு எந்த ஒரு நிவாரனமும் வழங்கவில்லை என்பதால் அவ்விண்ணப்பம் திரும்பப்பெறப்பட்டது – அதன்பின்னர், மேற்படி வகையங்கள், அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக் கூறு 14 மற்றும் 21-ஐ மீறுவதாகவும் அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானதாகவும் உள்ளதால் ம.ஒ.கு.த. சட்டம் 23(1) (அ) மற்றும் 21(4) ஆகிய பிரிவுகளை நீக்கறவு செய்யக் கோரி, உயர்நீதிமன்ற அமர்வு முன்பு ஒரு நீதிப் பேராணை மனுவை தாக்கல் செய்தார் – உயர் நீதிமன்றத்தின் அமர்வு, ம.ஒ.கு.த. சட்டப் பிரிவுகளை பயன்படுத்திக் கூடுதல் காவல் ஆய்வாளர் பிறப்பித்த உத்தரவு மனதினை செலுத்தாமல் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதனை கவனத்தில் கொண்டு, எதிர்மேல்முறையீட்டாளரை பிணையில் விடுவித்து ஒரு இடைக்கால நிவாரணம் வழங்கியது – மேல்முறையீட்டில், முடிவு - உயர் நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றங்களின்

கடுமையை கருத்திற்கொள்ளவில்லை - புலன் விசாரணைக்கு பிறகு, எதிர்மேல்முறையீட்டாளர்/குற்றம்சாட்டப்பட்டவர் மட்கா வியாபாரம் செய்துவருகிறார் என்றும், அவர் ஒரு சர்வதேச கொள்ளைக்கூட்டத் தலைவன் மற்றும் அவரது கூட்டாளிகளுக்கு நிதி வழங்கி வருகிறார் என்றும், மேலும் குற்றம்சாட்டப்பட்டவர் ஆயுதங்கள் வாங்குவதற்கான செலவீனத்திற்காகவும், தகவல் பெறுவதற்காகவும் நிதி ஏற்பாடு செய்கிறார் என்றும், அவர் ஒழுங்கமைவு குற்றங்களில் ஈடுபடுவோர் கூட்டமைப்பின் உறுப்பினர் என்பதும் தெரியவருகிறது – உயர் நீதிமன்றம் இ.த.ச-வின் கீழுள்ள மற்ற குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை பரிசீலிக்கவில்லை - உயர் நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்டவருக்கு இடைக்கால நிவாரணம் வழங்கும் நிலையில் ம.ஒ.கு.த. சட்டத்தின் கீழான குற்றத்திற்காக அவரை விடுதலைசெய்து, ம.ஒ.கு.த.-இலிருந்து எதிர்மேல்முறையீட்டாளரை இடை நிலையில் விடுவித்து அவருக்கு இறுதி பரிகாரம் வழங்கியது, அது முற்றிலும் ஏற்புடையதல்ல – இது குற்றம்சாட்டப்பட்டவர் தனக்கு சாதகமான நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் செயலுக்கு ஒப்பாகும், அது கடுமையாக எதிர்க்கப்பட்டது மற்றும் அங்கீகரிக்க முடியாதது – ஆகயால் உயர் நீதிமன்ற அமர்வால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவு செல்லாததாக்கப்பட்டு நீக்கறவு செய்யப்படுகிறது – எதிர்மேல்முறையீட்டாளர்/குற்றம்சாட்டப்பட்டவர் சரணடையவும், விசாரணையை எதிர்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

மேல்முறையீட்டை அனுமதித்த இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது:-

1. முதலாக எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களான இ.த.ச., பிரிவுகள் 384, 386, 387 உடனிணைந்த பிரிவு 34 ஆகியவற்றின் கீழான குற்றங்களின் தன்மை மிகக் கடுமையானது. பதிவாவணத்திலுள்ள சான்றாவணங்களை பரிசீலித்ததின்பேரில், விசாரணை முகமாய் ம.ஒ.கு.த. சட்ட வகையங்களை பயன்படுத்தியுள்ளது. புலன் விசாரணைக்குப் பிறகு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் ம.ஒ.கு.த. சட்டத்தின் கீழ் கூறப்பட்டுள்ள குற்றங்களுக்காக குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டன. எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் மூலம் உயர்நீதிமன்றத்தின் நீதியர் அமர்வு குற்றஞ்சாட்டப்பட்டவரை இடைக்கால நிவாரணம் மூலம் பிணையில் விடுத்துள்ளது. இம்மாதிரியான சங்கிலித் தொடர் தீர்முடிவுகளில், இந்நீதிமன்றத்தால் வகுத்தமைக்கப்பட்ட சட்டப்படி, நீதியர் அமர்வு குற்றஞ்சாட்டப்பட்டவரை இடைக்கால பரிகாரம் மூலம் அவரை பிணையில் விடுவித்திருக்க கூடாது. [காண்க : நிஹாரிகா இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் -எதிர்- மகாராஷ்டிரா மாநிலம் மற்றும் பலர் (குற்றவியல் மேல்முறையீடு எண்.330/202113.04.2021 அன்று முடிவு செய்யப்பட்டது)]

2. குற்றஞ்சாட்டப்பட்டவரை இடைக்கால பரிகாரத்தின் மூலம் பிணையில் விடுவிக்கும் போது, உயர்நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களின் கடுமையை பரிசீலிக்கவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. புலன் விசாரணைக்கு பிறகு எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவர் மட்கா வியாபாரம் செய்துவருகிறார் என்றும், மேலும் அவர் சோட்டா ஷகில் மற்றும் அவரது கூட்டாளிகளுக்கு நிதி உதவி வழங்குவதும், குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆயுதங்கள் வாங்குவதற்காக நிதி மற்றும் தகவல்கள் திரட்டியிருக்கிறார் என்றும் மேலும் அவர் ஒழுங்கமைவு குற்றங்களில் ஈடுபடுபவர்களின் கூட்டமைப்பின் ஒரு நபரென்றும் தெரிய வந்துள்ளது. எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் மூலம், போதுமான ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால், ம.ஒ.கு.த. சட்டத்தினைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கலாம் என்று அனுமதி வழங்கியது, சட்டத்திற்கு முரணானது என்று உயர்நீதிமன்றம் கவனத்தில் கொண்டுள்ளது. ஆகையால், உயர்நீதிமன்றம் இ.த.ச.,-வில் உள்ள இதர குற்றங்களை பரிசீலிக்கவில்லை. ம.ஒ.கு.த. சட்டத்தினை பயன்படுத்த அனுமதி வழங்கியது குறித்து இடைநிலை நிவாரணம் வழங்கும் நிலையிலேயே கவனத்தில் கொண்டது தேவையற்ற ஒன்று. உயர்நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரை இடைக்கால நிவாரணம் வழங்கும் நிலையிலேயே, ம.ஒ.கு.த. சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்ட குற்றத்திற்காக கிட்டத்தட்ட நிரபராதி

என்றே கூறிவிட்டது மற்றும் இடைக்கால நிவாரணம் வழங்கும் நிலையிலேயே இறுதிநிலை நிவாரணம் வழங்கியது எதிர்மேல்முறையீட்டாளரை ம.ஒ.கு.த. சட்டத்தின் கீழ் விடுவித்ததற்கு சமமாகும், அது ஏற்கத்தக்கதல்ல.

3. இதில் கவனத்தில் கொள்ளவேண்டியது யாதெனில், கற்றறிந்த சிறப்பு நீதிபதி/ம.ஒ.கு.த தனது விரிவான தீர்ப்பு மற்றும் உத்தரவின் மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவிக்க மறுத்துவிட்டார். அதனை எதிர்த்து குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றஞ்சாட்டப்பட்டவர் வழக்கு தொடுத்தார். குற்றஞ்சாட்டப்பட்டவர் தொடர்ந்த பிணை விண்ணப்பத்தை கற்றறிந்த தனி நீதிபதியால் விசாரிக்கப்பட்டது. கற்றறிந்த தனி நீதியரசர் குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவிக்க விரும்பாததால், குற்றஞ்சாட்டப்பட்டவர் அதனை திரும்பப்பெற்றார், அதன் பிறகு ம.ஒ.கு.த. சட்டத்தின் மீறுதல்களை எதிர்த்து உயர்நீதிமன்ற நீதியர் ஆயத்தின் முன்பு நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்தார், இதனை கவனத்தில் கொள்ளாத உயர்நீதிமன்ற நீதியர் அமர்வு, இடைக்கால பரிகாரத்தின் மூலம் அவரை பிணையில் விடுவித்துள்ளது, அவ்வாறான உத்தரவை கற்றறிந்த தனி நீதியரசரிடம் குற்றஞ்சாட்டப்பட்டவர் பெற்றிருக்க மாட்டார் என்பதால் அவர் பிணை விண்ணப்பத்தினை திரும்பப்பெற்றுக் கொண்டார். இந்த செயல் குற்றஞ்சாட்டப்பட்டவர் தனக்கு ஆதரவான தீர்ப்பை தரத்தகும் நீதிமன்றத்தில் வழக்கு தொடரும் செயலாகும், இது முற்றிலும் நிராகரிக்கப்படத்தக்கது மற்றும்

ஏற்கத்தக்கதல்ல. இந்த ஒரு காரணத்திற்காக மட்டுமே குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவிக்க உரிமையில்லை மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவித்த உயர்நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்பட்டு செல்லாததாக்கப்பட வேண்டும்.

தி/ள். நிஹாரிகா இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் - எதிர்- மகாராஷ்டிரா மாநிலம் மற்றும் பலர் **(குற்றவியல் மேல்முறையீடு எண்.330/2021 13.04.2021 அன்று முடிவு செய்யப்பட்டது)] - மேற்கோள் காட்டப்பட்டது.**

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண்.1493/2021.

பம்பாய் உயர்நீதிமன்ற நீதித்துறையின் குற்றவியல் நீதிப்பேராணை மனு எண்.4639/2018-இல் 29.01.2019 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

மேல்முறையீட்டாளர்களுக்காக - சச்சின் பாட்டீல், ராகுல் சிட்னிஸ், ஆதித்யா ஏ. பாண்டே, ஜியோ ஜோசப்.

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக - சித்தார்த்த தவே, மூத்த வழக்குரைஞர், ஆதித்யா வர்மா, செல்வி. பிரியம்வதா மிஸ்ரா, ஆதித்யா சிங்.

இந்நீதிமன்ற தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர்.ஷா அவர்களால் பகரப்பட்டது.

1. காசர்வடவ்லி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.I-190/2017-இல் எழுந்த ம.ஒ.கு.த.ச. எண்.24/2017 என்ற வழக்கில் பம்பாய் உயர்நீதிமன்றத்தின் முன் தொடரப்பட்ட குற்றவியல் நீதிப்பேராணை மனு எண்.4639/2018-இல் நீதியர் ஆயம் 29.01.2019 ஆம் தேதியன்று பிறப்பித்த எதிப்புக்குள்ளான உத்தரவின் மூலம் இடைக்கால நிவாரணமாக எதிர்மேல்முறையீட்டாளர்/குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவித்தது, இதனால் மனக்குறையுற்றும் அதிருப்தி அடைந்த மகாராஷ்டிரா மாநில அரசு இம்மேல்முறையீட்டை தாக்கல் செய்தது.

2. முதலில் நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது யாதெனில், இந்த வழக்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் அவருக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கும் நீதிமன்றத்தை தேடி சென்று வழக்கை தாக்கல் செய்யும் செயலுக்கு ஓர் மிகச் சிறந்த உதாரணமாகும், அதனை நாம் அங்கீகரிக்க முடியாது. அதன் பொருண்மைகள் பின்வருமாறு :-

2.1. குற்றஞ்சாட்டப்பட்ட இக்பால் இப்ராஹிம் கஸ்கர், இஸ்ரார் ஜமீல் சையத், மும்தாஜ் எஜாஜ் ஷேக் என்கிற ராஜு ஆகிய மூவரின் மேல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 384, 386, 387 உடனிணைந்த பிரிவு 34-ன் கீழான

குற்றங்களுக்காக கு.எண்.I-190/2017-இல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. தானே மாவட்டத்தின் கற்றறிந்த சிறப்பு நீதிபதி (ம.ஒ.கு.த.ச.), 26.03.2018 தேதியன்று பிறப்பித்த உத்தரவில் அரசு தரப்பு வாதங்கள் விரிவாக பரிசீலிக்கப்பட்டுள்ளது, அந்த உத்தரவு ம.ஒ.கு.த. வழக்கு எண்.24/2017-இல் சான்றாவணம் 15-ஆக குறிக்கப்பட்டுள்ளது, அந்த உத்தரவில் கற்றறிந்த சிறப்பு நீதிபதி, எதிர்மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த பிணை விண்ணப்பத்தினை ஏற்க மறுத்துவிட்டார், ஆகையால் அவை இங்கே திரும்ப கூறப்படவில்லை. ஆயினும், இங்கே கவனத்தில் கொள்ளவேண்டியது யாதெனில், புலனாய்வின்போது, சகீல் பாபு முகுதீன் ஷேக் என்கிற சோட்டா ஷகில் என்கிற சி.எஸ். மற்றும் இக்பால் இப்ராஹிம் கஸ்கர் என்கிற இக்பால் ஹசன் ஷேக் இப்ராஹிம் என்கிற ஒரு சர்வேதச கொள்ளைக்கூட்ட தலைவன்களால் ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற செயல் நடந்துள்ளன என்றும், இந்த வழக்கும் எதிர்மேல்முறையீட்டாளர் அவ்வப்பொழுது அத்தகைய ஒழுங்கமைக்கப்பட்ட கொள்ளை கூட்டத்திற்கும், மற்ற கொள்ளை கூட்டங்களுக்கும் நிதியளித்தும், அந்த நிதியினை பயன்படுத்தி அவர்கள் வேறு நபர்களின் உதவியை நாடி அத்தொகையை அவர்களுக்கு அளித்தனர் என்றும், இந்த வழக்கின் எதிர்மேல்முறையீட்டாளர் மும்பையின் போரிவாலி என்ற இடத்தில் மட்கா வியாபாரம் செய்து வருவதும் கண்டறியப்பட்டுள்ளது, மேலும் முன் அனுமதி பெற்ற பிறகுதான் மகாராஷ்டிரா ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற தடுப்பு சட்டத்தின்

வகையங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. புலனாய்வுக்கு பிறகு இ.த.ச., மற்றும் ம.ஒ.கு.த.சட்டங்களின் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவர் கற்றறிந்த சிறப்பு நீதிபதி முன் பிணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்துள்ளார். குற்ற அறிக்கையின் ஒரு பகுதியான அரசு தரப்பில் சார்ந்திருக்கும் வாக்குமூலங்களை பரிசீலித்த பிறகு, கற்றறிந்த சிறப்பு நீதிபதி 26.03.2018 அன்று பிறப்பித்த உத்தரவில், அவர் பிணை விண்ணப்பத்தினை ஏற்க மறுத்துவிட்டார்.

3. கற்றறிந்த சிறப்பு நீதிபதி தனது பிணை விண்ணப்பத்தினை ஏற்க மறுத்துவிட்டதால், மிகவும் மனக்குறையுற்று, அதிருப்தி அடைந்த இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவர், உயர்நீதிமன்றத்தினை அணுகி, பிணை விண்ணப்ப எண்.855/2018-ஐ தாக்கல் செய்துள்ளார். அந்த விண்ணப்பம் கற்றறிந்த தனி நீதிபதியால் கேட்கப்பட்டது. கற்றறிந்த தனி நீதிபதி, 13.07.2018 அன்று பிறப்பித்த உத்தரவு மூலம் தெரியவருவது யாதெனில், எதிர்மேல்முறையீட்டாளர்/குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக வாதிடும் கற்றறிந்த வழக்குரைஞரின் நீண்ட வாதத்தை கேட்ட பின்னர், உயர்நீதிமன்றம் எந்த நிவாரணமும் வழங்க முற்படவில்லை என்றபோது, கற்றறிந்த வழக்குரைஞரின் அறிவுறுத்தலின் பேரில், மேற்படி பிணை விண்ணப்பம் திரும்பப் பெறப்பட்டது என்பதில் மறுப்பேதும் இல்லை. ஆகையால் மேற்படி பிணை விண்ணப்பத்தை கற்றறிந்த தனி நீதிபதி 13.07.2018 தேதியிட்ட உத்தரவு மூலம், விண்ணப்பம்

திரும்பப்பெற்றதாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அந்த விண்ணப்பத்தினை திரும்பப்பெற்றவுடன், இந்த வழக்கின் எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவர், கீழே கூறப்பட்டுள்ள பரிகாரங்களை வேண்டி, நீதிமன்றத்தின் நீதியர் அமர்வு முன் நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்து, பின்வரும் பரிகாரங்களை கோரினார் :-

> "(அ) ம.ஒ.கு.த. சட்டத்தின் பிரிவு 23(1)(a) முற்றிலும் தன்னிச்சையாகவும், வழிகாட்டுதல் இன்றியும், நெறிமுறையின்றியும், அரசமைப்புக்கு முரணானதாகவும் இருப்பதால் அது இந்திய அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 14, 19 மற்றும் 21-ஐ மீறுவதாக இருப்பதால் அதனை நீக்கறவு செய்ய வேண்டுமென்றும்; இல்லாவிட்டால் அரசமைப்புச் சட்டத்திற்கு புறம்பாக செயல்படுவதிலிருந்து பாதுகாக்க, ம.ஒ.கு.த. சட்டத்தின் பிரிவு 23 (1) (a)-இல் வரும் முன் ஒப்புதல் என்ற வார்த்தைகளின், வரம்பு மற்றும் நோக்கெல்லையை வலுவூட்டி, அதனை விளக்கி, விவரிக்க வேண்டுமென்றும், அவை சம்பந்தப்பட்ட அதிகாரியின் விருப்பங்கள், கற்பனைகள், பாதகம், முரண்பட்ட உளப்போக்கு ஆகியவற்றால் ஆட்கொள்ளப்பட்டு, ஒரு வேற்று

சம்பிரதாயமாக வழங்கப்படவில்லை என்பதனை உறுதி செய்ய வேண்டுமென்றும்;

(ஆ) ம.ஒ.கு.த. சட்டப்பிரிவு 21(4)-ன் வகையத்தை நீக்கறவு செய்து, அதில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள, பிணையில் விடுவிப்பதற்காக விதிக்கப்பட்ட இரட்டை நிபந்தனைகள், இந்திய அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 14 மற்றும் 21-றிற்கு முரணாக இருப்பதாக அறிவிக்க வேண்டுமென்றும்;

(இ) வாதிக்கு எதிராக எதிர்ப்புக்குள்ளான பிரிவு 23 (1)(a)-ன்கீழ் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான முன் அனுமதியினைப் பற்றி கூறும் 10.10.2017 தேதியிட்ட உத்தரவை (மேற்படி சான்றாவணம்- ஆ) செல்லாததாக்கியும், நீக்கறவு செய்ய வேண்டுமென்றும், அதன் விளைவாக மனுதாரருக்கு எதிராக தானேவிலுள்ள காசர்வடவ்லி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட கு.எண்.I-190/2017 (மேற்படி சான்றாவணம் - அ)-லிருந்து எழுகின்ற இ.த.ச., பிரிவுகள் 384, 386, 387, 34 மற்றும் 120 (b) மற்றும் 1999-ஆம் ஆண்டு ம.ஒ.கு.த.சட்டப்பிரிவுகள் 3(1)(ii), 3(2), 3(4) மற்றும் 3(5) ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட சிறப்பு ம.ஒ.கு.த. வழக்கு எண்.24/2017 மற்றும் ம.ஒ.கு.த.

சட்டத்தின் பிரிவுகள் 3(1), 3(2), 3(4) மற்றும் 3(5)-ன் கீழான குற்றத்தை பொறுத்தவரையில் அவருக்கு 29.11.2017 தேதியிட்ட குற்ற அறிக்கையையும் (மேற்கூறிய சான்றாவணம்-ஊ) செல்லாததாக்க வேண்டுமென்றும்;

(ஈ) நீதியின் நலனுக்காக பொருத்தமானதாகக் கருதப்படும் நிபந்தனைகளில் மனுதாரருக்கு சுதந்திரம் அளிக்க வேண்டும்;

(உ) இந்த வழக்கில் இறுதி உத்தரவு பிறப்பிக்கும் வரையில், இடைக்கால/உடனடி இடைக்கால நிவாரணம் வழங்கும் நிலையிலேயே, இடைக்கால பிணையில் விடுவிப்பதற்கு, மாண்புமிகு நீதிமன்றம் சரியானது மற்றும் உகந்தது எனக் கருதும் வகையில், மனுதாரரை, தானேவிலுள்ள காசர்வடவ்லி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட கு.எண்.I-190/2017-இல் எழுகின்ற சிறப்பு ம.ஒ.கு.த. வழக்கு எண்.24/2017-லிருந்து விடுவிக்க வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

3.1. உயர்நீதிமன்றம் தனது எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் மூலம், ம.ஒ.கு.த.சட்டப்பிரிவு 23(1)(a)-ன் மீறுகையை எதிர்த்து நீதிப்பேராணை மனுவில் 'விதி' வழங்கிட வேண்டுமென்றும், வேண்டுரையின் பேரில், ம.ஒ.கு.த.சட்டப்பிரிவு 21(4)-ன் வகையங்களை நீக்கறவு செய்து, பிணையில்

விடுவிப்பதற்காக விதிக்கப்பட்ட இரட்டை நிபந்தனைகள் இந்திய அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 14 மற்றும் 21-ஐ மீறுவதாகவும், அரசமைப்புக்கு முரணாக உள்ளது என அறிவித்து உத்தரவிட்டது. ஆகையால், நிலுவையிலுள்ள நீதிப்பேராணையில் மேற்கூறியுள்ள இரு வகையங்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஒத்து இருக்கிறதா என்று உயர்நீதிமன்றத்தால் இன்னும் பரிசீலிக்கப்படவில்லை. ஆயினும், மேற்கூறிய இரு வகையங்களின் மீறுகையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவில், உயர்நீதிமன்றம், கூடுதலா காவல் துறை ஆய்வாளர், ம.ஒ.கு.த.சட்டத்தினை பயன்படுத்தி வழங்கிய அனுமதி.ஒப்புதல்கள் குறித்து விவாதித்துள்ளது, மேலும் இந்த நிலையில் சாட்சியத்தை விரிவாக பரிசீலிக்க வேண்டியதில்லை என்றாலும், கு.ந.மு.ச. பிரிவு 482-இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்துவதுபோல், வழக்கிலிருந்து விடுவிக்ககோரிய மனுவினை பரிசீலித்து கவனத்தில் கொண்டுள்ளது யாதெனில், ம.ஒ.கு.த.சட்டத்தினைப் பயன்படுத்தி கூடுதல் காவல்துறை ஆய்வாளர் 10.10.2017 அன்று வழங்கிய அனுமதி, மனதினை செலுத்தாமல் பிறப்பிக்கப்பட்டது என உயர்நீதிமன்றத்தால் கருத்துரைக்கப்பட்டது.

அவ்வாறு முடிவெடுத்து, மேற்கூறிய இரு வகையங்களின் மீறுதல்களை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிப்பேராணையினை ஏற்கும்பொழுது, உயர்நீதிமன்றம் இடைக்கால நிவாரணம் மூலம், கு.எண்.I-190/2017-இல் எழுந்த

சிறப்பு ம.ஒ.கு.த. வழக்கு எண்.24/2017-லிருந்து இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவிக்க உத்தரவிட்டுள்ளது. எனவே, இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு கற்றறிந்த தனி நீதியரசரால் பிணை விண்ணப்பத்தில் கிடைக்காத பிணையை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது.

4. உயர்நீதிமன்றத்தின் நீதியர் அமர்வு, இடைக்கால நிவாரணத்தின் மூலம் எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவித்து பிறப்பித்த உத்தரவால் மனக்குறையுற்றும், அதிருப்தியடைந்த மாநில அரசு, அந்த உத்தரவை எதிர்த்து தற்போதைய மேல்முறையீட்டை தாக்கல் செய்தது.

5. மேல்முறையீட்டாளர்/மாநிலத்திற்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் முனைப்புடன் வாதிட்டது யாதெனில், இவ்வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை கருதி உயர்நீதிமன்றம், எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவித்ததன் மூலம், அதுவும் இடைநிலை உத்தரவு மூலம் விடுவித்து பெரும் பிழை புரிந்துள்ளது.

5.1. குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவிக்கும் பொழுது, உயர்நீதிமன்றம் குற்றத்தின் ஆழத்தை கருத்தில் கொள்ளவில்லை என்று

சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு முன்னர், கற்றறிந்த சிறப்பு/ம.ஒ.கு.த. நீதிபதி தான் பிறப்பித்த விரிவான தீர்ப்புரை மற்றும் உத்தரவு மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணையில் விடுவிக்க கோரிய விண்ணப்பத்தினை ஏற்க மறுத்துவிட்டார், அதன்பிறகு, குற்றஞ்சாட்டப்பட்டவர் உயர்நீதிமன்றத்தின் முன் பிணை விண்ணப்பத்தினை தாக்கல் செய்தார், அதனை விசாரித்த தனியமர் நீதிபதி இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதங்களையும் கேட்டு, அதிலும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வழக்குரைஞரின் வாதத்தைக்கேட்டு, பிணையில் விடுவிக்க விரும்பாததை அறிந்த குற்றஞ்சாட்டப்பட்டவர், அந்த பிணை விண்ணப்பத்தை திரும்பப்பெற்றுவிட்டார் என்றும், அதன் பிறகு உயர்நீதிமன்றத்தின் நீதியர் அமர்வு முன் ம.ஒ.கு.த. சட்டத்தின் வகையங்களின் மீறுதல்களை எதிர்த்தும், இடைக்கால நிவாரணம் வேண்டியும், நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்தார், எதிர்பாராதவிதமாக உயர்நீதிமன்றத்தின் நீதியர் அமர்வு பரிகாரத்தை வழங்கியது என்ற சங்கதியை உயர்நீதிமன்றம் சரிவர மதீப்பீடு செய்யவோ அல்லது கருத்தில் கொள்ளவோ இல்லை என்று சமர்ப்பிக்கப்பட்டது.

5.2. விசாரணைக்குப் பின்னர், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராக விசாரணை முகைமையால் தாக்கல் செய்யப்பட்ட விரிவான குற்ற அறிக்கையை உயர்நீதிமன்றம் பர்சிலிக்கவில்லை என்று சமர்ப்பிக்கப்பட்டது.

5.3. குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவித்து அதுவும் இடைக்கால நிவாரணமாக பிறப்பித்த நீதியர் அமர்வின் உத்தரவு, தி/ள். நிஹாரிகா இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் -எதிர்- மகாராஷ்டிரா மாநிலம் மற்றும் பலர் (குற்றவியல் மேல்முறையீடு எண்.330/2021 13.04.2021 அன்று முடிவு செய்யப்பட்டது)] என்ற வழக்கின் தீர்முடிவினை கருத்தில் கொண்டு பார்க்கையில், இந்த உத்தரவு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சமர்ப்பிக்கப்பட்டது.

5.4. எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் மூலம் உயர்நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரை ம.ஒ.கு.த. சட்டத்தில் கூறப்பட்ட குற்றங்களிலிருந்து மறைமுகமாக விடுதலை செய்துள்ளது, அதுவும் இடைக்கால நிலையில்தான் என்று சமர்ப்பிக்கப்பட்டது. இடைநிலையில், உயர்நீதிமன்றம், அதற்கேற்ற அதிகாரி ம.ஒ.கு.த. சட்டப்பிரிவுகளை வைத்து வழங்கிய அனுமதி/ஒப்புதலை நீக்கறவு செய்து உத்தரவிட்டது, அது காலம் கடந்த மற்றும் பொருந்தத்தகா செயலாகும்.

5.5. எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆயுதங்கள் வாங்குவதற்காக நிதி மற்றும் தகவல்களை திரட்டியிருக்கிறார் என்றும், அவர் ஒழுங்கமைவு குற்றங்களில் ஈடுபடுவோர் கூட்டமைப்பின் உறுப்பினர் என்பது விசாரணை முகைமைகள் சேகரித்த தகவல்கள் மூலம் போதுமான ஆதாரங்கள்

உள்ளது, மேலும் அந்த ஆதாரங்கள் குற்ற அறிக்கையின் ஒரு அங்கமாகும் என்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

6. மேலே கூறப்பட்ட வாதங்களின் மூலம், இந்த மேல்முறையீட்டினை அனுமதிக்கும்படி வேண்டுரைக்கப்பட்டது.

7. இந்த மேல்முறையீடு எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவரின் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் ஸ்ரீ. சித்தார்த்த தவே அவர்களால் மறுக்கப்பட்டது.

7.1. வழக்கு சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளில் இருந்தும், பதிவாவணத்தில் உள்ள சான்றாவணத்தை பரிசீலித்தும், ம.ஒ.கு.த. சட்டத்தின் கீழ் குற்றவாளியின் மீது நடவடிக்கை எடுக்க அனுமதி வழங்கியது சட்டத்திற்கு முரணானது என்று உயர்நீதிமன்றம் சரியாக தீர்மானித்தது என்று சமர்ப்பிக்கப்பட்டது. உயர்நீதிமன்றம் ம.ஒ.கு.த. வகையத்தை பயன்படுத்த எந்த ஒரு உறுதியான ஆதாரங்களும் இல்லையென்று குறிப்பாக கருத்துரைக்கப்பட்டது என்று சமர்ப்பிக்கப்பட்டது. எனவே, உயர்நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவித்தது சரிதான் என்று சமர்ப்பிக்கப்பட்டது.

7.2. உயர்நீதிமன்றம், எதிர்மேல்முறையீட்டாளரை கடந்த 2019 ஆம் ஆண்டு பிணையில் விடுவித்தது என்றும், இரண்டு ஆண்டுகளுக்கு

மேலாகியும் குற்றஞ்சாட்டப்பட்டவரை, பிணையில் விடுவிக்கும் பொழுது, அவருக்கு வழங்கிய சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தியதாகவோ எந்த ஒரு குற்றச்சாட்டுமில்லை என்றும் சமர்ப்பிக்கப்பட்டது. ஆகையால், இந்திய அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 136-ன் அதிகாரத்தை பயன்படுத்தி, உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பிணையினை இரத்து செய்யக்கூடாது என்று வேண்டுரைக்கப்பட்டது.

8. தொடர்புடைய தரப்பினர்கள் சார்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர்களின் நீண்ட வாதங்களை நாங்கள் கேட்டோம்.

9. முதலாக எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களான இ.த.ச., பிரிவுகள் 384, 386, 387 உடனிணைந்த பிரிவு 34 ஆகியவற்றின் கீழான குற்றங்களின் தன்மை மிகக் கடுமையானது. பதிவாவணத்திலுள்ள சான்றாவணங்களை பரிசீலித்ததின்பேரில், விசாரணை முகமாய் ம.ஒ.கு.த. சட்ட வகையங்களை பயன்படுத்தியுள்ளது. புலன் விசாரணைக்குப் பிறகு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் ம.ஒ.கு.த. சட்டத்தின் கீழ் கூறப்பட்டுள்ள குற்றங்களுக்காக குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டன. எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் மூலம் உயர்நீதிமன்றத்தின் நீதியர் அமர்வு குற்றஞ்சாட்டப்பட்டவரை இடைக்கால நிவாரணம் மூலம் பிணையில்

விடுத்துள்ளது. இம்மாதிரியான சங்கிலித் தொடர் தீர்முடிவுகளில், இந்நீதிமன்றத்தால் வகுத்தமைக்கப்பட்ட சட்டப்படி, நீதியர் அமர்வு குற்றஞ்சாட்டப்பட்டவரை இடைக்கால பரிகாரம் மூலம் அவரை பிணையில் விடுவித்திருக்க கூடாது. [காண்க : நிஹாரிகா இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் -எதிர்- மகாராஷ்டிரா மாநிலம் மற்றும் பலர் (குற்றவியல் மேல்முறையீடு எண்.330/2021 13.04.2021 அன்று முடிவு செய்யப்பட்டது)]

9.1. குற்றஞ்சாட்டப்பட்டவரை இடைக்கால பரிகாரத்தின் மூலம் பிணையில் விடுவிக்கும் போது, உயர்நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களின் கடுமையை பரிசீலிக்கவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. புலன் விசாரணைக்கு பிறகு எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவர் மட்கா வியாபாரம் செய்துவருகிறார் என்றும், மேலும் அவர் சோட்டா ஷகில் மற்றும் அவரது கூட்டாளிகளுக்கு நிதி உதவி வழங்குவதும், குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆயுதங்கள் வாங்குவதற்காக நிதி மற்றும் தகவல்கள் திரட்டியிருக்கிறார் என்றும் மேலும் அவர் ஒழுங்கமைவு குற்றங்களில் ஈடுபடுபவர்களின் கூட்டமைப்பின் ஒரு நபரென்றும் தெரிய வந்துள்ளது. எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் மூலம், போதுமான ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால், ம.ஒ.கு.த. சட்டத்தினைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கலாம் என்று அனுமதி வழங்கியது, சட்டத்திற்கு முரணானது என்று உயர்நீதிமன்றம் கவனத்தில்

கொண்டுள்ளது. ஆகையால், உயர்நீதிமன்றம் இ.த.ச.,-வில் உள்ள இதர குற்றங்களை பரிசீலிக்கவில்லை. ம.ஒ.கு.த. சட்டத்தினை பயன்படுத்த அனுமதி வழங்கியது குறித்து இடைநிலை நிவாரணம் வழங்கும் நிலையிலேயே கவனத்தில் கொண்டது தேவையற்ற ஒன்று. உயர்நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரை இடைக்கால நிவாரணம் வழங்கும் நிலையிலேயே, ம.ஒ.கு.த. சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்ட குற்றத்திற்காக கிட்டத்தட்ட நிரபராதி என்றே கூறிவிட்டது மற்றும் இடைக்கால நிவாரணம் வழங்கும் நிலையிலேயே இறுதிநிலை நிவாரணம் வழங்கியது எதிர்மேல்முறையீட்டாளரை ம.ஒ.கு.த. சட்டத்தின் கீழ் விடுவித்ததற்கு சமமாகும், அது ஏற்கத்தக்கதல்ல.

9.2. இதில் கவனத்தில் கொள்ளவேண்டியது யாதெனில், கற்றறிந்த சிறப்பு நீதிபதி/ம.ஒ.கு.த தனது விரிவான தீர்ப்பு மற்றும் உத்தரவின் மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவிக்க மறுத்துவிட்டார். அதனை எதிர்த்து குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றஞ்சாட்டப்பட்டவர் வழக்கு தொடுத்தார். குற்றஞ்சாட்டப்பட்டவர் தொடர்ந்த பிணை விண்ணப்பத்தை கற்றறிந்த தனி நீதிபதியால் விசாரிக்கப்பட்டது. கற்றறிந்த தனி நீதியரசர் குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவிக்க விரும்பாததால், குற்றஞ்சாட்டப்பட்டவர் அதனை திரும்பப்பெற்றார், அதன் பிறகு ம.ஒ.கு.த. சட்டத்தின் மீறுதல்களை எதிர்த்து உயர்நீதிமன்ற நீதியர் ஆயத்தின் முன்பு நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்தார், இதனை கவனத்தில் கொள்ளாத

உயர்நீதிமன்ற நீதியர் அமர்வு, இடைக்கால பரிகாரத்தின் மூலம் அவரை பிணையில் விடுவித்துள்ளது, அவ்வாறான உத்தரவை கற்றறிந்த தனி நீதியரசரிடம் குற்றஞ்சாட்டப்பட்டவர் பெற்றிருக்க மாட்டார் என்பதால் அவர் பிணை விண்ணப்பத்தினை திரும்பப்பெற்றுக் கொண்டார். இந்த செயல் குற்றஞ்சாட்டப்பட்டவர் தனக்கு ஆதரவான தீர்ப்பை தரத்தகும் நீதிமன்றத்தில் வழக்கு தொடரும் செயலாகும், இது முற்றிலும் நிராகரிக்கப்படத்தக்கது மற்றும் ஏற்கத்தக்கதல்ல. இந்த ஒரு காரணத்திற்காக மட்டுமே குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவிக்க உரிமையில்லை மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவித்த உயர்நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்பட்டு செல்லாததாக்கப்பட வேண்டும்.

10. உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவிற்கிணங்க 2019-ஆம் ஆண்டில் குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட்டார் என்ற குற்றஞ்சாட்டப்பட்டவரின் சார்பான பணிந்துரையைப் பொறுத்தவரையில், பிணையில் அவை விடுவிக்கப்படுகையில் அவருக்கு அளிக்கப்பட்ட சுதந்திரத்தை அவர் தவறாகப் பயன்படுத்தவில்லையென்றும், ஆகையால் தொடர்புடைய பிணை உத்தரவு இரத்து செய்யப்படக்கூடாது மற்றும் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நீக்கறவு செய்யப்பட வேண்டியதில்லை என்பதாகும், மேலும் குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவிக்கக் கூறும்

தவறான உத்தரவை இந்நீதிமன்றத்தால் வகுத்தமைக்கப்பட்ட சங்கிலித் தொடர் தீர்முடிவுகளின் வாயிலாக செல்லாததாக்கப்பட்டு, நீக்கறவு செய்யப்பட வேண்டும் என்றும், சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தியது மற்றும் இன்ன பிற காரணங்களின்பேரில், குற்றஞ்சாட்டப்பட்டவரின் பிணை இரத்து செய்வதென்ற இரண்டுமே இரு வேறு நிலைப்பாட்டினை கொண்டது என்றும் அவற்றிற்கு வெவ்வேறு இன்றியமையாக்கூறுகள் பொருத்தப்படவேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது பிணை உத்தரவை இரத்து செய்வது குறித்த பிரச்சனை அல்ல, ஆனால் குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவித்து உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தவறான உத்தரவை செல்லாததாக்கி, நீக்கறவு செய்வது குறித்த பிரச்சனையாகும்.

11. மேற்சொன்ன காரணங்களை கருத்தில் கொண்டு இந்த மேல்முறையீடுகள் வெற்றியடைகிறது. காசர்வடவ்லி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட கு.எண்.I-190/2017-லிருந்து எழுகிற சிறப்பு ம.ஒ.கு.த. எண்.24/2017-இல் எதிர்மேல்முறையீட்டாளர்கள், குற்றஞ்சாட்டப்பட்டவரை பிணையில் விடுவிப்பது தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் நீதியர் அமர்வில் குற்றவியல் நீதிப்பேராணை மனு எண்.4639/2018-இல் 29.01.2019 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவு இதன் மூலம் செல்லாததாக்கப்பட்டு நீக்கறவு செய்யப்படுகிறது. இதன் விளைவாக எதிர்மேல்முறையீட்டாளர்-குற்றஞ்சாட்டப்பட்டவர் உடனடியாக சரணடைந்து

நீதிமன்ற விசாரணையை எதிர்கொள்ளும்படி உத்தரவிடப்படுகிறார். எதிர்மேல்முறையீட்டாளர் உடனடியாக சரணடையவில்லையெனில், பிணையில்லா பிடியாணை வழங்குவதன் மூலம் தொடர்புடைய நீதிமன்றம் அவரை பாதுகாப்பில் வைக்கலாம். அதன்படி தற்போதைய மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல் முறையான நோக்கங்களுக்கும் மற்ற தீர்ப்புரையை நிறைவேற்றறலுக்கும் செயற்படுத்துதலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்".